


மே 5 வணிகர் சங்க தினத்தை முன்னிட்டு மனிதநேய மக்கள் கட்சி வணிகர் சங்கம் சார்பில் நலிவடைந்த வணிகர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாநில வர்த்தக அணி பொருளாளர் எஸ்.எம்.அப்துல் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார். எம்.எல்.ஏ. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மனிதநேய மக்கள் கட்சி மாநில தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., ப.அப்துல் சமது எம்.எல்.ஏ., துரை. இரவிக்குமார் எம்.பி., காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் எம்.டி..குலம் மொய்தீன், தமுமுக மாநில செயலாளர் மு. யா.முஸ்தாக்தீன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் அல்ஹாஜ் எஸ்.எம் அமீர் அப்பாஸ், மாவட்டக் கழக அவைத்தலைவர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றியம், அச்சங்குளத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பார்வையிட்டார். உடன் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி மற்றும் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன், ஒன்றியச் செயலாளர்கள் கமுதி வி. வாசுதேவன், போகலூர் குணசேகரன், நயினார் கோவில் சக்தி, அண்ணாமலை, பரமக்குடி நகர செயலாளர் நகர் மன்ற உறுப்பினர் ஜீவரத்தினம், மற்றும் கூட்டுறவு ஆலையின் மேலாண்மை இயக்குனர் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### குண்டு துளைக்காத வாகனத்தில் இருந்து – மாற்று வாகனத்தில்

# ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா பயணம் செய்த நிகழ்வு!

## தமிழ்நாடு காவல்துறை விளக்கம்!

சென்னை, மே 7 -

ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா பயணம் செய்த குண்டு துளைக்காத வாகளத்திலிருந்து மாற்று வாகனத்தில் பயணம் செய்தது குறித்த அறிக்கை வருமாறு :-

ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சரும் மற்றும் பா.ஜ.க. தேசியத் தலைவருமான ஜே.பி.நட்டா அவர்கள் மத்திய பாதுகாப்பு படையினருடன் கூடிய Z+ பாதுகாப்பு பிரிவு உடையவராவார். அவர் 02.05.2025 அன்று சென்னைக்கு வருகிறார் என்ற தகவல் அறிந்ததும் அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்பட்டது. அதன்படி அவருக்காக குண்டு துளைக்காத வாகனமும் மற்றும் அவருடன் மத்திய பாதுகாப்புப் படையினர் பயணிப்பதற்காக இரண்டு வாகனங்களும். தமிழ்நாடு பாதுகாப்புப் படையினர் பயணிக்க மூன்று வாகனங்களும், ஒரு நோயாளர் ஊர்தி (AMBULANCE) மற்றும் அரசு மரபு வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டது.

2) இத்தகைய குண்டு துளைக்காத வாகனங்கள், ஒன்றிய அரசினால் பரிந்துரைக்கப்பட்ட பணிமனைகளில் தயாரிக்கப்பட்டு பாதுகாப்புப்பிரிவின் பயன்பாட்டில் நல்ல முறையில் இயங்கிவருகின்றன. இத்தகைய வாகனங்கள், தொழில்நுட்பக் காரணங்களால் அதிவேகமாக செல்லக்கூடாது என நிபந்தனைகள் உள்ளன.

3) 03.05.2025 அன்று காலை SRM பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற... வது சைவ சித்தாந்த மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு மதியம் அங்கிருந்து புறப்பட்டு வேலூர் பொற்கோயிலுக்குச் சென்று பின்னர் இரவு 8.40 மணிக்கு சென்னையிலிருந்து டெல்லி பயணிப்பதற்காக மாலை 5.30 மணியளவில் வேலூரிலிருந்து புறப்பட்டு ஒன்றிய அமைச்சர் சென்னை திரும்பினார். இரவு 07.30 மணியளவில், தாம்பரம் மாநகரம் எல்லைக்குட்பட்ட வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்டச் சாலையில் திருமுடிவாக்கம் அருகில் வந்து கொண்டிருந்தனர். குண்டு துளைக்கமுடியாத வாகனங்கள் அதிக எடை கொண்டவை என்பதாலும், தொழில்நுட்பக் காரணங்களுக்காகவும் இவற்றை மற்ற வாகனங்களின் வேகத்திற்கு இணையாக இயக்குவதில்லை. ஆனால், ஒன்றிய அமைச்சரின் நேர்முக உதவியாளரின் வற்புறுத்தியதின் பேரில், வாகனங்கள் மணிக்கு 120 கிமீக்கும் அதிகமான வேகத்தில் இயக்கினர். அதனால் குண்டு துளைக்காத காரினை மற்ற வாகனங்களுக்கு இணையான வேகத்திற்கு இயக்க முற்பட்ட பொழுது பின்பக்கச் சக்கரத்தில் உருவான உராய்வு சத்தத்தினை அறிந்து அத்தகவலைக் கூறி விட்டு, ஒட்டுநர் அவ்வாகணத்தை ஒன்றிய அமைச்சரின் பாதுகாப்பினைக் கருதி வாகனத்தில் வேகத்தைக் குறைத்து சாலை நரத்தில் நிறுத்தினார். உடனடியாக ஒன்றிய அமைச்சர் அவர்களை அரசு மரபின்படி வழங்கப்பட்ட மாற்று வாகனத்தில் ஏற்றி, உரிய பாதுகாப்புடன் சென்னை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதில் அமைச்சர் பயணம் செய்த வாகனத்திற்கு எவ்வித சேதமோ அதன் உள்ளிருந்தவர்களுக்கு எவ்வித பாதுகாப்பு குறைபாடோ ஏற்படவில்லை. ஒன்றிய அமைச்சர் பயணம் செய்த குண்டு துளைக்காத வாகனம் உடனடியாக நிறுத்தப்பட்ட பொழுது அவரது உடைமைகளை பின்னால் எடுத்து வந்த எட்டாவது நிலையிலிருந்த வாகனத்தின் மீது பத்தாவது நிலையிருந்த பாதுகாப்பு வீரர்களின் வாகனம், பின்புறத்தில் வந்து உரசி நின்றது. இதனால்... வது வாகனத்தின் இடது பின்புறம் மற்றும் 10வது வாகனத்தின் வலது முன் பகுதியில் மிகக் குறைந்த சேதம் எற்பட்டது.

4) மிக முக்கிய விருந்தினர்களுடன் பயணிப்பவர்கள், வாகனத்தின் வேகத்திறனுக்கு அதிகமான வேகத்தில் வாகனங்களை இயக்க வற்புறுத்த வேண்டாமென அறிவுறுத்தல் செய்யப்பட்டதுடன், வாகனத்தின் வேகத்திறனுக்கும் கூடுதலான வேகத்தில் இயக்க கூடாதென காவல் துறையினருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

5) தமிழக காவல்துறையில் பாதுகாப்பு பிரிவில் உள்ள குண்டு துளைக்காத வாகனங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருவதால் அண்டை மாநிலங்களான பாண்டிச்சேரி, கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளாவிற்கு முக்கிய விருந்தினர்கள் வரும்பொழுது அவர்களின் வேண்டுகோளின்படி. இவ்வாகனங்கள் அனுப்பிவைக் கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு காவல் துறையின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

### சென்னை தெற்கு மாவட்டம்

## மதுரவாயல் தெற்கு பகுதி 152வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டச் செயலாளர் எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி அவர்கள்மீது, நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, **ஜெ.பாஸ்கரன்,** (*16, கலைஞர் தெரு, வளசரவாக்கம், சென்னை 600087*) அவர்கள் 152வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 05-05-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டத்தைச் சேர்ந்த எஸ். அப்பன் (எ) சத்தியமூர்த்தி அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 05-05-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில்

# அன்னம்தரும்அமுதகரம்75வதுநாள்!

## கொளத்தூர் பகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உணவு வழங்கினார்!

சென்னை, மே 7 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72 வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக் கரங்கள் மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவுவழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங் களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன் அவர்களும், 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 75வது நாளான நேற்று முன்தினம் (5.5.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி, கொளத்தூர், 70வது வார்டு, ரமணா நகர், கௌதமபுரம் குடியிருப்பு பகுதி மற்றும் 68வது வார்டு, பெரியார் நகர் மருத்துவ மனை அருகில், கார்த்திகேயன் சாலை ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியம் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க "அன்னம் தரும் அமுதக்கரங்கள் திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தினந்தோறும் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

"அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டமானது நேற்று முன்தினத்துடன் (5.5.2025) தற்பொழுது 75 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, "அன்னம் தரும் அமுதக்கரங்கள் பெயரில் ஒரு நாளைக்கு 1000 நபர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் காலை உணவுகளை வழங்கி வருகிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பெருமதிப்பிற்குரிய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி, தொடர்ந்து இரண்டரை மாத காலத்திற்கும் மேலாக பல்வேறு நிகழ்ச்சிகள் என்கின்ற வகையில் இலக்கிய நிகழ்ச்சி என்று எடுத்துக் கொண்டால் பொதுக் கூட்டங்கள், கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள், வாழ்த்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், என்று பல்வேறு வகையிலான நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக பசிப்பிணியை போக்கும் ஒரு அற்புதமான நிகழ்ச்சியை ஓராண்டு காலம் என்று முடிவு எடுத்து, பிப்ரவரி திங்கள் 20ஆம் தேதி திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைத்து இன்றைக்கு தினந்தோறும் இந்த காலை உணவு திட்டத்தை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்றார்.

இன்று காலை கொளத்தூர் பகுதியில் இரண்டு இடங்களில் இந்த காலை உணவு பரிமாறப்பட்டது. இந்த உணவை பொருத்தவரை மிக நேர்த்தியாக செய்யப்பட்ட ஒன்று சூடாகவும் சுவையாகவும் மக்களுக்கு பயன்பெறுகின்ற வகையில் அற்புதமாக அந்த உணவு சமைக்கப்பட்டிருக்கின்றது. வடை, இட்லி, பொங்கல், இடியாப்பம், அதேபோல் கேசரி என்று பல்வேறு வகைகளான அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. இன்று மட்டுமல்லாது இதுவரை வழங்கப்பட்ட 75 நாட்களுமே கூட பல வகைகளில் இந்த உணவு என்பது பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது வெறும் ஏழை எளியவர்களுக்கு என்றும் இல்லாமல் யாருக்கெல்லாம் வயிறு இருக்கின்றதோ அவர்கள் எல்லாம் உண்ணுகின்ற வகையிலான ஒரு அற்புதமான உணவாக இன்றைக்கு நாம் இங்கே பார்த்தோம் விளையாட்டு வீரர்கள் வாகனங்களிலே சென்று கொண்டு இருப்பவர்கள் வாகனங்களை நிறுத்தி விட்டு வந்து வாங்கி செல்வது இப்படி பல தரப்பினரும் பயன்படுகின்ற ஒரு அற்புதமான நிகழ்ச்சி இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள முன்நின்று நடத்திக் கொண்டிருக் கின்றார்.

நிகழ்ச்சிகள் பொதுவாக தொடர் நிகழ்ச்சிகள் நடத்துவது என்பது எங்கேயாவது தொய்வு ஏற்படும் ஆனால் தொடர் நிகழ்ச்சிகள் தொய்வு இல்லாமல் நடத்துகிற ஒரு மிகச்சிறந்த மாவட்ட செயலாளர் என்கின்ற வகையில் சேகர்பாபு தொடர்ந்து இந்த நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு வருகின்றார் அவர் நடத்துகின்ற நிகழ்ச்சிகளில் தோய்வும் இருக்காது எந்த விதமான தொய்வு இல்லாமல் அந்த நிகழ்ச்சியை நேர்த்தியாக நடத்தக் கூடியவர் இந்த உணவு வழங்கும் நிகழ்ச்சியில் கூட ஒழுங்கமையப்பட்டிருக்கின்ற பாத்திரங்கள் ஒவ்வொருவரும் கையுறையுடன் அந்த உணவு பரிமாற வேண்டும் என்று என்கின்ற நேர்த்தி உணவு வழங்கப்படுகின்ற பொழுதே "அன்னம் தரும் அமுத கரங்கள் என்ற தலைப்பிலான ஒரு பாடல் ஒளிபரப்பு இப்படி பல்வேறு சிறப்புகளோடு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

உண்மையிலேயே எல்லா நிகழ்ச்சியை காட்டிலும் மிகச் சிறப்பான நிகழ்ச்சி என்பதை மனமகிழ்ச்சியோடு பாராட்டுகளை நானும் சக மாவட்ட செயலாளர் என்கின்ற வகையில் இதை மிகுந்த மன நிறைவோடு பாராட்டி மகிழ்கிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழ. மணி
### மே 7 (2017)



இளமைக் காலம் முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

மன்னார்குடி நகர துணைச் செயலாளர், நகரச் செயலாளர், கீழத்தஞ்சை மாவட்டப் பொருளாளர், மாவட்ட துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

மன்னை நகராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர். மன்னை நகர கூட்டுறவு வங்கித் தலைவர், தமிழ்நாடு அரசு பயிர் காப்பீட்டு ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். கழகப் பணியாற்றுவதில் மாவீரர் என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## கண்ணீர் அஞ்சலி



தூத்துக்குடி மாவட்ட தி.மு.க. மூத்த உறுப்பினரும்
பேரறிஞர் அண்ணா, தமிழினத்தலைவர் கலைஞர்
ஆகியோருடன் இணைந்து கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடி

எழுத்தாளர்
திரு. புலவர் **தி.பொன்னுச்சாமி** அவர்கள்

05.05.2025 திங்கள்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்
என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
அன்னாரது நல்லடக்கம் 06.05.2025 செவ்வாய்கிழமை
மாலை 4.00 மணியளவில் எண் 4/56 தனசேகர் நகரில் உள்ள
அன்னாரது இல்லத்தில் வைத்து நடைபெறும்.

**தூத்துக்குடி மாநகர தி.மு.க**
**தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க**